# நம் பொறுப்புகளில் உண்மையாயிருத்தல்

Transcribed from a message spoken in November 2014 in Chennai

By *R.S.Milton*

*"...பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை...தேவனே, உம்முடைய* ***சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்,*** *புத்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது...பலியையும், காணிக்கை யையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரணபலிகளையும் நீர் விரும்பவில்லை..."* (எபி. 10:5-9) என்று ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திற்கு வரும்போது பிதாவினிடத்தில் சொல்கிறார்.

*"நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய்,* ***உன் ஊழியத்தை நிறைவேற்று****"* (2 தீமோ. 4:5) அப்போஸ்தலனாகிய பவுல் தன் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்குச் சொல்கிறார்.

*"ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமை யாக எண்ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற* ***ஊழியத்தை நிறைவேற்றவுமே*** *விரும்புகிறேன்".*

இந்த வசனங்களை வாசிக்கும்போது ஏதோவொரு மிக ஆழமான, மிக ஆவிக்குரிய சங்கதியை உங்களுக்கு சொல்லப்போகிறேன் என்பதுபோலத் தோன்றலாம். ஆனால், நான் சொல்லப்போவது அந்த அளவுக்கு மிக உயர்ந்த, ஆழமான, ஆவிக்குரிய சங்கதி இல்லை. நான் சொல்ல விரும்புவது *நம் பொறுப்புகளில் நாம் உண்மையாயிருக்க வேண்டும்.* இந்த உலகத்து மக்கள் இன்பத்தை நாடித் தேடி ஓடுகிறார்கள். அதற்காக அவர்கள் எல்லாவற்றையும் செய்வார்கள். அவர்களை இயக்குவது இந்த உலகத்திலே அவர்கள் பெறுகிற இன்பம்தான். அது பணமாக இருக்கலாம் அல்லது சில உயர்ந்த வசதிகளாக இருக்கலாம். இன்பத்தைப் பெறுவதற்காக அவர்கள் ஆசையாய் உழைக்கின் றார்கள்.

ஆனால், தேவனுடைய மக்களுடைய நிலை என்ன? தேவன் நமக்குச் சில பொறுப்புகளைக் கொடுக் கிறார். அந்தப் பொறுப்புகளை நாம் நிறைவேற்றும்போது தேவனிடத்திலிருந்து இளைப்பாறுதலை யும், இன்பத்தையும் பெறுகிறோம். இந்த உலகத்து மக்கள் பெறுகிற இன்பத்தைவிட அது மிக அதிகமானது என்று நாம் நம்புகிறோம், நாம் விசுவாசிக்கிறோம். அதற்கு நாம் மெய்சாட்சிகளாக இருக்கிறோம். பொய்சாட்சிகளல்ல. "உண்மையிலேயே நம்மைவிட இந்த உலகத்து மக்கள் அதிக மாக இளைப்பாறுதலும், இன்பமும் அடைகிறார்கள். ஆனால் என்ன செய்வது! நான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால் 'இல்லை! இல்லை!' அவர்களைவிட நாங்கள்தான் இன்ப மாக இருக்கிறோம் என்று நாங்கள் சொல்லியாக வேண்டும்" என்பதல்ல. நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையான சாட்சிகளாக இருக்கிறோம். தேவன் நமக்குப் பொறுப்புகளைத் தருகிறார். பொறுப்புகளிலே நாம் உண்மையாக இருக்க வேண்டும். இப்படி நாம் பொறுப்புகளிலே உண்மையாயிருக்கும்போது போதுமான மகிழ்ச்சியையும், இன்பத்தையும் தேவன் நமக்கு அருள் கிறார். அதற்கு ஆதாரமாக சில வசனங்களை நாம் வாசித்தோம். நீதிமொழிகளில் இன்னொரு வச னம் உண்டு. "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" (நீதி. 28:20). நம் பொறுப்புகளில் நாம் உண்மையாய் இருக்கும்போது தேவனிடத்திலிருந்து நாம் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம். இன்னும் நான்கு நற்செய்திகளிலும் இதற்கொத்த வசனங்கள் உண்டு. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஓர் உவமைக் கதையை சொல்லும்போது, "நல்லது, உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே! உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று சொல்கிறார்.

## பணியாள், பணிவிடை

இந்த சில வசனங்களில் "ஊழியக்காரன்", "ஊழியம்" என்ற வார்த்தையை அடிக்கடி வாசிக்கிறோம். இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்கும்போது ஊழியக்காரன் என்றால் அவர் ஓர் அங்கி போட்டுக் கொண்டிருப்பார்; அவர் ஒரு போதகராக இருப்பார் அல்லது ஒரு பிரபலமான ஆளாக இருப்பார் அல்லது பிரயாணம் செய்கிறவராக இருப்பார் என்பதுபோன்ற கற்பனைகள் நம் மனதிலே எழுவ துண்டு. அது அப்படியல்ல. ஊழியக்காரன் என்றால் தேவனுடைய பணியாள். தேவன் இடுகிற பணியைச் செய்கிற எவனும் பணியாள்தான். இதற்கு முழு புதிய ஏற்பாடும் சான்று பகர்கின்றது. நான் பொய்சொல்லவில்லை. தேவன் இடுகிற சிறிய பணிதொடங்கி பெரிய பணிவரை எதைச்

செய்கிறவனும் தேவனுடைய பணியாள். சில சமயங்களிலே "ஊழியக்காரன்", "வேலைக்காரன்", "வேலையாள்", "பணிவிடைக்காரன்", "பணியாள்" போன்ற பல பதங்களை நான் பயன்படுத்துவ துண்டு. ஆனால், தைரியமாக சில பதங்களைத் துணிந்து அறிமுகப்படுத்தலாம் என்று நினைக் கிறேன். *பணியாள்* என்கிற பதத்தை நாம் பயன்படுத்தினால் மிகவும் நல்லது. அதைவிட ஒருவேளை கிரேக்க மொழி தெரிந்தவர்கள் படித்துப்பார்க்க வேண்டும். அதைவிட பெரிய அர்த்தத்தோடு ஊழியக்காரன் என்கிற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. பணியாள், நாம் தேவனுடைய பணி யாள். சிலர் "அடிமைகள், கொத்தடிமைகள்" என்றெல்லாம் சொல்வதுண்டு. அது கேட்பதற்கு மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும். "நாம் தேவனுடைய கொத்தடிமைகள்" என்று சொல்பவன் பொதுவாக எந்த மனிதனுக்கும் அடிமையாகமாட்டான். ஆனால், "நான் தேவனுடைய கொத்தடிமை," என்று சொல்லிக்கொள்வான். கவர்ச்சியாக இருக்கும் என்பதற்காக அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன் படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். நாம் அனைவரும் தேவனுடைய பணியாட்கள். ஏனென்றால் நீங்கள் உற்று கவனியுங்கள். சுவாரசியமாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை.

தேவனுடைய வீட்டிலே சிறுபிள்ளைகள் தொடங்கி பெரியவர்கள்வரை எல்லாருக்கும் பணிவிடை உண்டு, பொறுப்பு உண்டு. நாம் வெளியே போகும்போது, "உங்களுடைய ஐக்கியத்தைப்பற்றி சொல்லுங்கள். உங்கள் சபை என்ன?" என்று கேட்கும்போது "எங்களுடைய சபை வீட்டிலே கூடி வருகிறோம்" என்று ஒருநாளும் சொல்லாதிருங்கள். வீட்டிலே கூடிவருவதல்ல நம் குணாம்சம். தேவ னுடைய வீட்டிலே எல்லாரும் பொறுப்புகளைச் செய்வதற்கு ஊக்குவிப்பதுதான் நம் சிறப்பான குணாம்சம். அதை நாம் பள்ளிக்கூடத்தில் கூடிவந்தாலும் செய்யலாம் அல்லது நாம் பிரத்தியேகமாக ஒரு கட்டிடம் கட்டி அங்கு கூடிவந்தாலும் செய்யலாம். வீட்டிலே கூடிவந்தாலும் நாம் செய்யலாம். வீட்டிற்கு வெளியே நாம் கடற்கரையிலோ, காட்டிலோ, குகையிலோ கூடிவந்தாலும் அதைச் செய் வோம். தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் ஒரு பொறுப்பும், பணியும் உண்டு. தேவனுடைய மக்கள் அனைவரும் தத்தம் பொறுப்புகளையும், பணிகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம், வலியுறுத்துகிறோம். அது தேவனுக்கு மிகவும் அருமையானது, தேவனுடைய மக்களுக்கு மிகவும் ஆசீர்வாதமானது.

நான் நான்கு குறிப்புகளைச் சொல்கிறேன். ஒன்று, **பொறுப்புகளை வரையறுங்கள்**. இரண்டு, **மிகச் சிறு பொறுப்புகளில் கருத்தாயிருங்கள்**. மூன்று, **திராணிக்கு மிஞ்சின பொறுப்புகள்**. நான்கு, **பிறர் பொறுப்புகளில் தவறும்போது சகித்துக்கொள்ளுங்கள்.**

நாம் இப்படி மிக எளிமையாகக் கூடிவருகிறோம். சொற்பொழிவு ஆற்றுவதுபோல நான்கு குறிப்பு களைக் கொடுக்க வேண்டுமா என்று நீங்கள் நினைக்கலாம். என்னைப் பொறுத்தவரை இரண்டு நிமிடத்திற்குமேல் நாம் பேசுவதாக இருந்தால் அல்லது மூன்று நிமிடத்திற்குமேல் பேசுவதாக இருந் தால் கண்டிப்பாக "நான் இந்தக் காரியத்தைச் சொல்லப்போகிறேன்" என்று சொல்லுங்கள். ஏனென் றால், என் நம்பிக்கையும், ஆவலும் என்னவென்றால் தேவனுடைய மக்கள் எல்லாரும் எல்லா நாளும் மூன்று நிமிடம் மட்டும் பேசுகின்றவர்களாக இருக்க முடியாது. அது நம் பொறுப்புகளில் ஒன்று. நாம் 10 நிமிடங்களும், 30 நிமிடங்களும் பேச வேண்டிய நாட்கள் வரும். அந்த நாட்களிலே நாம் நம் பொறுப்பை நேர்த்தியாய் நிறைவேற்ற இப்படிச் சொல்வது நல்லது.

### 1. பொறுப்புகளை வரையறுங்கள்

ஒன்று, உங்கள் பொறுப்புகளை வரையறுங்கள். நாம் ஒரு குடும்பத்தில் வாழ்கின்றோம், தேவ னுடைய சபையிலே வாழ்கின்றோம், சமுதாயத்திலே வாழ்கின்றோம். இதில் பொறுப்புகள் உண்டு. தேவன் இப்படிப்பட்ட பொறுப்புகளை வரையறுக்கிறார். எபிரெயர் 10ஆம் அதிகாரம் 7ஆம் வச னத்தை நாம் வாசித்தோம். "புத்தகச்சுருளிலே என்னைக்குறித்து என்ன எழுதியிருக்கிறது?" அப்படி யென்றால் "இந்த உலகத்திலே என் வாழ்க்கைக்கு நீர் தந்த பொறுப்பு என்ன?". பெரிய பொறுப்பு களும் உண்டு. அன்றாட வாழ்க்கையிலே தேவன் தருகின்ற மிகச் சிறிய பொறுப்புகளும் உண்டு. சில சமயங்களில் பெரிய பொறுப்புகள் நம் கண்களைக் கவரும். சிறிய பொறுப்புகளைக்குறித்து நாம் அக்கறையற்றவர்களாக இருப்போம். சிறிய பொறுப்பிலே நாம் கவனம் வைத்திருப்போமென் றால் பெரிய பொறுப்புகளிலும் கவனம் வைத்துத்தான் இருப்போம்.

ஒரிசாவில் எரித்துக்கொல்லப்பட்ட கிரஹாம் ஸ்டெயின்ஸ் குடும்பத்தைப்பற்றி அவர் எடுத்துக்காட்டாகச் சொன்னார். அன்றாட வாழ்க்கையிலே அவர்கள் தங்கள் குடும்பத்திலே ஒருவர் செய்கின்ற பிழை களை ஒருவர் மன்னிக்கிறவர்களாக இருந்தார்களாம். அதனால் ஒருவர் மிகப்பெரிய பிழை, மிகப் பெரிய நட்டம், மிகப்பெரிய துன்பம், மிகப்பெரிய ஊறு விளைவித்தபோது மன்னிப்பதற்கு அவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள். இதை "நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணி

னார்களேயானால், குதிரைகளோடு எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால் யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்" (எரே. 12:5) என்ற வசனத்தை நாம் ஏற்கெனவே மேற்கோள் காட்டியிருக்கிறோம்.

### பிதாவானவர் வரையறுக்கிற பொறுப்பு

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த முழு வாழ்க்கையையும் ஒன்றே ஒன்றுதான் ஆட்சி செய்தது. "என்னுடைய பொறுப்பு என்ன? பிதாவானவர் எனக்கு என்ன பொறுப்புகளைக் கொடுத்திருக்கின் றாரோ அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவது மட்டுமே என் நோக்கம்". அவர் அதைத்தான் செய் தார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து முப்பது வயதிலே தன் வீட்டைவிட்டு வந்ததற்கு பலர் பல்வேறு காரியங்களைச் சொல்வார்கள். முப்பது வயது ஆசாரிய வேலையைச் செய்ய வேண்டிய வயது என்று நான் நினைக்கிறேன். ஆனால், நான் யோசித்துப் பார்த்தபோது மிக எளிய காரியம் தென் பட்டது. அவருக்கு முப்பது வயது ஆகும்போது அவருடைய இளைய சகோதரர்கள் வீட்டுப் பொறுப்புகளைச் சுமக்கின்ற ஒரு பக்குவத்தை அடைந்துவிட்டார்கள். ஆகவே, "நாம் இனிமேல் வாழ்வின் தலையாய, முதன்மையான பொறுப்பு என்னவோ அதை நிறைவேற்ற காலம், நேரம் வந்தாயிற்று என்று கணித்தார்," என்று நான் நினைக்கின்றேன். இதை உங்களால் ஒத்துக்கொள்ள முடிகிறதா? நிச்சயமாக என்னால் ஒத்துக்கொள்ள முடிகிறது. தன் வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்பு மரித்தபிறகு தன் குடும்பத்தின் பொறுப்புகளை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிதா தனக்குத் தந்த பொறுப்புகளாகப் பாவித்தார் என்று நான் நினைக்கின்றேன்.

"இது உண்மையிலேயே என் பொறுப்பு இல்லை அல்லது என் தற்காலிகமான பொறுப்பு," என்று அவர் நிச்சயமாக நினைத்திருக்கமாட்டார் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் தற்காலிகமான பொறுப்பு என்று ஒன்றும் இல்லை. இன்றைக்கு தேவன் நமக்கு என்ன பொறுப்பு வைத்திருக் கிறாரோ அது நம் பொறுப்பு. வாழ்க்கையே தற்காலிகமானதுதான். இந்த வாழ்க்கை முழுவதும் நிறைவேற்றுகின்ற எல்லாப் பொறுப்புகளும் தற்காலிகமானதுதான். எனவே, "இது தற்காலிகமான பொறுப்பு; இது நித்திய பொறுப்பு," என்று ஒன்றும் இல்லை. நம் நித்திய பொறுப்பு ஆயிரக்கணக் கான தற்காலிகமான பொறுப்புகளால் தொகுக்கப்பட்டுள்ளது.

தான் மரிக்கும் தருவாயிலே தனக்கு அன்பாயிருக்கிற சீடனைப் பார்த்து, "இதோ உன் தாய்" (யோவான் 19:27) என்று சொல்கிறார். இதற்கும் பெரிய ஆழமான அர்த்தம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆனால், தன் பொறுப்புகளை நிறைவேற்றுவது ஒரு மனிதனுடைய வாழ்க்கை யின் ஆழத்தை காண்பிக்கிறதென்றால் அது மிகவும் ஆழமான ஒரு செயல்தான். தன் வேதனை யையும், வலியையும்தவிர வேறு எதைப்பற்றியும் யோசிக்க முடியாத நிலையில் ஒரு மனிதன் இருக்கும்போதும் அவன் மற்றவர்களைப்பற்றி நினைத்துப்பார்க்கிறான் என்றால் அது பெரிய காரி யம். எனவே, நம் ஆண்டவராகிய இயேசு கடைசி நிமிடத்திலும் தம் பொறுப்புகளை நிறைவேற்று கிறார். "இது எனக்கென்று பிதாவானவர் வரையறுத்த பொறுப்பு. ஆ! எனக்கு மூன்று சகோதரிகள் இருக்கின்றார்கள், இரண்டு சகோதரர்கள் இருக்கின்றார்கள். இதெல்லாம் அவர்கள் பார்த்துக்கொள் வார்கள்" என்பதல்ல. பிதா அதை என் பொறுப்பென்று வரையறுத்திருக்கிறாரென்றால் அது என் பொறுப்புதான்.

### உலகத்தின் கணக்கு

உலகத்து மனிதர்கள் அல்லது இயற்கையான மனிதர்கள் யோசிப்பதுபோல் அவர் யோசிப்பதில்லை. இயற்கையான மனிதர்கள் மிகவும் கணக்குப் போடுவார்கள். "நான் முப்பது வருடம் அம்மாவைப் பார்த்தேன், இல்லையா? நீ ஒரு மூன்றரை வருடம் பார்த்துக்கொள். நீ பார்த்தபிறகு இரண்டாவது தம்பியிடம் ஒரு இரண்டரை வருடம் விடு. அப்புறம் மூன்றாவது தம்பியிடம் ஒரு நான்கு வருடம் விடு. நாலாவது தங்கையிடம் ஐந்து வருடம் விடு". இவைகளெல்லாம் இயற்கையான மனிதர் களுடைய கணக்கு, கணிப்பு. இது ஒன்றும் இந்த உலகத்திலே நூதமானதல்ல. இது பிதாவானவர் எனக்கு வரையறுத்த பொறுப்பு என்றால் இயற்கையான மனிதர்கள் கணக்கிடுவதுபோல் நான் எந்த கணக்கும் போடுவதில்லை.

### என்னைக்குறித்து என்ன எழுதியிருக்கிறது

அதுதான் எபிரெயர் 10ஆம் அதிகாரம் 7ஆம் வசனத்தின் அர்த்தம். "புத்தகச்சுருளில் என்னைக் குறித்து" என்றவுடனே ஒரு புத்தகத்தை நாம் கற்பனை செய்துகொள்ள வேண்டாம். ஆனால், ஒரு

புத்தகத்திலே எழுதப்பட்டிருந்தால் எந்த அளவுக்கு வரையறுக்கப்பட்டிருக்குமோ அந்த அளவுக்கு தேவன் நமக்கு நியமித்திருக்கிற பொறுப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன என்பதுதான் அதன் பொருள். "இதோ உம் சித்தம் செய்ய வருகிறேன். பலியையும், காணிக்கையும் நீர் விரும்புகிறது இல்லை". தேவன் எனக்கு வரையறுத்த பொறுப்பை நான் நிறைவேற்றாமல் அவருக்குப் பலியையும் காணிக்கையும் செலுத்த முயற்சி பண்ணுவது தேவனுக்கு இலஞ்சம் கொடுப்பதற்குச் சமானம்.

பழைய ஏற்பாட்டிலே பல எடுத்துக்காட்டுகள் உண்டு. சவுல் ஓர் எடுத்துக்காட்டு. அமலேக்கியரையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் அழிக்கும்படி சாமுவேல் சொல்லியிருந்தார். ஆனால், அவர்களோ ஆடுமாடுகளைக் கொல்லாமல் விட்டுவிடுகிறார்கள். "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று சாமுவேல் கேட்கும்போது, "அவைகள் உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடுவதற்காக" என்று சொன்னான். இது தேவனுக்கு இலஞ்சம் கொடுப்பதற்குச் சமானம்.

"ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்காக ஒரு ஆல்பம் வெளியிடுகிறேன்; அவருக்காக நான் காடு மலையெங்கும் சுற்றித்திரிந்து நற்செய்தி அறிவித்தேன்; பதினைந்து நாட்கள் நான் பீஹாரிலே மற்ற மனிதர்கள் போக முடியாத இடத்திலே நான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்காக நற்செய்தியை அறிவித்தேன்," என்று நாம் சொல்லும்போது ஒரு தீர்க்கதரிசி மட்டும் இருந்தானானால், "நான் கேட்கிற ஆடுகளின் சத்தமும், மாடுகளின் கூக்குரலும் என்ன?" என்று கேட்பான். இதற்கு அர்த்தம் என்ன? "ஆ! உனக்கு நான் நியமிக்காத பொறுப்புகளிலன், நிறைவேற்றாத பொறுப்புகளின் சத்தம் என் காதில் தொனிக்கிறது".

## எல்லா இடங்களிலும் பொறுப்பு

முதலாவது, எந்த இடத்திலே நாம் இருந்தாலும், "ஆண்டவரே, நீர் எனக்கு இந்த இடத்திலே வரையறுத்த பொறுப்பு என்ன? என் மனைவியைக்குறித்து நீர் வரையறுத்த பொறுப்பு என்ன? என் கணவனைக்குறித்து நீர் வரையறுத்த பொறுப்பு என்ன? என் பிள்ளைகளைக்குறித்து நீர் வரையறுத்த பொறுப்பு என்ன?" என்று நான் கேட்பேன். அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்றுவேன். பொறுப்பு இல்லையென்றால் நான் அமைதியாக இருந்துவிடுவேன். அந்தப் பொறுப்பு மிகச் சிறிய பொறுப்பாக இருக்கலாம். நன்றாய்க் கவனியுங்கள். மிகப் பெரிய தலைவர்கள் மிகப் பெரிய பொறுப்புகளைப்பற்றித்தான் பேசுவார்கள். கர்த்தருடைய நித்திய திட்டத்தைப்பற்றி, நித்திய நோக்கத்தைப் பற்றிப் பேசுவார்கள். அடுத்தபடியாய், "எப்படி இந்த வருடத்திலே 200 ஆத்துமாக்களுக்கு நற்செய்தி அறிவிப்பது? நாம் எப்படி ஒரு ஏக்கர் நிலம் வாங்கி கர்த்தருடைய மக்கள் கூடிவருவதற்கு கட்டிடம் கட்டுவது," என்பதைப்பற்றித்தான் யோசிப்பார்கள்.

அருமையான சகோதர சகோதரிகளே! நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தேவனுடைய மக்கள் எல்லாரைப்பற்றியும் பொறுப்பு உண்டு. ஏதேன் தோட்டத்திலே ஒரு குரல் கேட்டது என்று பாட்டு பாடுவோம்.. ஆதியாகமம் 4ஆம் அதிகாரத்திலே இன்னொரு குரலும் கேட்டது. தேவனாகிய கர்த்தர் காயீனைப் பார்த்து, "உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே?" என்று கேட்டார். காயீன் அதற்கு "எனக்குத் தெரியாது; நான் என் சகோதரனுக்குக் காவலாளியா?" என்றான். சரி, யார் இந்தப் பொறுப்புகளை தருவது? நாம் பரத்திலிருந்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவால் மறுபடி பிறப்பிக்கப்பட்டவர்கள். புதிதாகப் பிறந்தவர்களென்றால் நம் ஆவியிலே அந்தப் புத்தகச்சுருள் இருக்கும். ஒரு மனிதன் பரிசுத்த ஆவியால் மறுபடியும் பிறந்திருக்கிறான், பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாழ்கிறாரென்றால் எல்லாப் பொறுப்புகளைப்பற்றிய உணர்வு இருக்கும்; உணர்வு இருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக தேவனுடைய மக்கள் பலருக்கு அப்படிப்பட்ட பொறுப்பு இருப்பது இல்லை.

பரிசுத்த ஆவியானவர் என்று சொன்னவுடன் அந்நிய பாஷை பேசுவதுதான் பலருக்கு ஞாபகம் வரும். அதுதான் தங்கள் பொறுப்பு என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஒரு இசைக்கருவியை கையில் எடுத்துக்கொண்டு தலையை ஆட்டி, கையைத் தட்டிப் பாடுவதுதான் தங்கள் பொறுப்பு என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் கீழே விழுந்துகிடக்கும் பேப்பரை எடுக்கச்சொல்லமாட்டார் என்று நினைக்கிறார்கள். அவர்கள் அதைத் தங்கள் பொப்பாகக் கருதுவதில்லை. நான் இதை ஒரு எடுத்துக்காட்டுக்கு சொல்கிறேன். எல்லா இடங்களிலும் நம் பொறுப்புகளை பரிசுத்த ஆவியானவர் வரையறுக்கிறார். அதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## 2. மிகச் சிறிய பொறுப்புகளிலும் கருத்தாயிருத்தல்

இரண்டாவது, மிகச் சிறிய பொறுப்புகளில் கருத்தாயிருங்கள். இதை நான் போன வாரம்தான் கற்றுக்கொண்டேன். வீட்டிற்கு வெளியே நம் சாட்சியைக்குறித்து நாம் எச்சரிக்கையாக இருப்போம்.

ஆனால், வீட்டிலே நம் சாட்சியைக்குறித்து எச்சரிக்கையாக இருக்க மாட்டோம். குறிப்பாக நம் வாழ்க்கை துணையிடம் அந்த அளவுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க மாட்டோம். ஏனென்றால் வீட்டிலேகூட இலகுவாக இல்லையென்றால் என்ன அர்த்தம்? ஆனால் நம் வாழ்க்கைத்துணை-அது கணவனாக இருக்கலாம், மனைவியாக இருக்கலாம்-பிள்ளைகளாக இருக்கலாம். அவர்களைப் பொறுத்தவரை நம் பொறுப்புகளில் நாம் கருத்தாக இருக்க வேண்டும், கவனமாக இருக்க வேண்டும். இதற்கு அர்த்தம் வீட்டிலேகூட இறுக்கமாகத்தான் இருக்க வேண்டுமா? இராணுவத்தில் "எல்லாரும் நேராக நில்லுங்கள்" என்று சொன்னவுடனே நேராக நிற்பதுபோல கணவன் மனைவியிடத்தில், மனைவி கணவனிடத்தில், பெற்றோர் பிள்ளைகளிடத்தில், பிள்ளைகள் பெற்றோர்களிடத்தில் இறுக்கமாக இருக்க வேண்டும் என்றோ, "இது என் பொறுப்பல்ல" என்று விறைப்பாகச் சொல்ல வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

தேவனுடைய பிள்ளையினுடைய குணாம்சம் என்னவென்று கேட்டால் நாம் மிகவும் இயல்பான வாழ்க்கை வாழ முடியும். எப்போதுமே ஒரு சட்டம் தொங்கிக்கொண்டிருக்கிற வாளைப்போல் நம் கழுத்துக்குமுன்பாக நிற்கின்றது என்பதுபோல, "இப்படித் திரும்பினால் வாள் நம்மை வெட்டிவிடும்; அப்படித் திரும்பினால் வாள் நம்மை வெட்டிவிடும்," என்பதுபோன்ற பயத்திலோ, இறுக்கத்திலோ வாழ்கிறவர்கள் தேவனுடைய மக்களல்ல. "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலா. 5:1) என்று பவுல் எழுதுகிறார். இயேசுகிறிஸ்து நம்மை விடுதலைக்கென்று அழைத்திருக்கிறார்; மனிதர்களுக்கல்ல சட்டத்திற்கு நீங்கள் அடிமைகளாக வேண்டாம்.

சிறிய பொறுப்புகள் உண்டு. பல எடுத்துக்காட்டுகளைக் கொடுக்கலாம். புதிய ஏற்பாட்டிலே இரண்டு எடுத்துக்காட்டுகளைத் தருகிறேன். அப்போஸ்தலர் நடபடிகள் கடைசி அதிகாரத்திலே அப்போஸ்தலனாகிய பவுல் தன் பயணம் முடிகிற தருவாயிலே ரோமை நெருங்கும்போது சிலர் அப்பியுபுரம் வரைக்கும் சென்று வரவேற்றார்கள் (அப். 28:15) என்று எழுதியிருக்கிறது. பவுலுடைய பிரதியுத்தரம் என்னவென்றால் சகோதரர்களைச் சந்தித்தவுடனே அவன் ஆறுதலடைந்தான், தைரியமடைந்தான்.

எதற்காக நாம் கூடிவருகிறோம்? எனக்குப் பேசுவதற்கு ஒரு மேடை வேண்டும் என்பதற்காகவா? இது ஒரு சடங்கா? கிறிஸ்தவர்களென்றால் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடிவரவேண்டும் என்பதற்காகவா?. ஞாயிற்றுக்கிழமைகளில் கூடிவரவில்லையென்றால் எதையோ இழந்துவிடுகிறோம் என்பதால் கூடிவருகிறோமா? கிறிஸ்துமஸ் அன்றைக்கு கூடிவரவில்லை என்று வைத்துக்கொள்வோமே! உலகம் முழுவதும் திருவிழாக் கோலம் கொண்டிருக்கும்போது கிறிஸ்துமஸ் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது; அன்றைக்கு நாம் மட்டும் கொண்டாடவில்லையென்றால் எப்படி என்பதற்காக நாம் ஒரு கூடுகை வைக்க வேண்டுமா? அப்படியல்ல.

சகோதரர்கள் அப்பியுபுரம்வரைக்கும் சென்று பவுலைச் சந்தித்தார்கள். பவுல் அதனால் ஆறுதலடைந்தான். "பவுல் மிகவும் ஆவிக்குரிய சகோதரன்; நிறைய சிலுவையை அநுபவித்தவன்; அதனால் இவரையெல்லாம் அப்பியுபுரம்வரை சென்று சந்திக்க வேண்டிய அவசியமில்லை. இவர் ஆவிக்குரிய அசுரர்," என்பதல்ல.

2 தீமோத்தேயுவிலே ஒநேசிப்போரு என்பவனைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். "ஒநேசிப்போருவின் வீட்டாருக்கு கர்த்தர் இரக்கம் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான். என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவில்லை. அவன் ரோமாவிலே வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான்," (2 தீமோ. 1:16, 17) ஒநேசிப்போருவின் ஊழியம் என்ன? ஒநேசிப்போருவின் பொறுப்பு என்ன? ஒருவன் தன்னை யாருமே விசாரிப்பாரில்லை அல்லது அவனுடைய விலங்கைக்குறித்து அச்சப்பட்டு, வெட்கப்பட்டு விலகும்போது அவன் அந்த விலங்கைக்குறித்து அச்சப்படாமல், வெட்கப்படாமல் பவுல் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்று ஜாக்கிரதையாய் தேடிக் கண்டுபிடிக்கிறான்.

ஒரு சகோதரன் பேசிக்கொண்டிருந்தபோது, "தேவனுடைய வார்த்தை என்பது மிக ஆழமான, உயரமான சங்கதிகளைப்பற்றிப் பேசவில்லை; சாதாரண விஷயங்களைப்பற்றிப் பேசுகிறது," என்று சொன்னார். 2 தீமோத்தேயு 4ஆம் அதிகாரத்திலே அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுக்கு சொல்லும்போது, "நீ வரும்போது என் மேலங்கியைக் கொண்டுவா" என்று சொல்கிறார். எவ்வளவு பெரிய ஆவிக்குரிய வசனம் இது! "குளிர் காலத்திற்கு முன்பு வந்து சேரப் பிரயாசப்படு. வரும்போது என்னுடைய அங்கியை கொண்டு வா. அது மட்டுமல்ல என்னுடைய புத்தகங்களையும் கொண்டுவா. மிக முக்கியமாகத் தோற்சுருளை கொண்டுவா". இவைகளெல்லாம் பரிசுத்த வேதாக மத்திலே எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் மிகச் சிறிய நிலைகள். "குளிர்காலத்திற்கு முந்திவா. என்

துணியைக் கொண்டுவா". ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுலிடம் பெரிய அங்கிகளெல்லாம் இருந்ததில்லை. ஒரு கம்பளி ஆடைகளெல்லாம் இருந்ததில்லை. எனவே, "ஒரு அங்கியை கொண்டு வா; புத்தகங்களை கொண்டுவா; இன்னும் முக்கியமாகத் தோற்சுருளைக் கொண்டுவா," என்றார்.

### குடும்பத்தில் சிறிய பொறுப்புகள்

ஆகவே, இரண்டாவது, மிகச் சிறிய பொறுப்புகளைக் குறித்துக் கருத்தாயிருங்கள். பொதுவாக நம் வேலைகளை மற்றவர்களுக்கு நாம் விடாதிருப்போமாக. என் துணியை என் மனைவி துவைத்துப் போட்டார்கள். நீண்ட நாட்கள் கழித்து மடித்து வைக்கிற மாபெரும் உணர்வை கர்த்தர் எனக்குக் கொடுத்தார் என்பது மிக மிகத் தாழ்வான ஒரு சாட்சி. அந்த அளவுக்கு என் பொறுப்புகள் அதிக மாகிவிட்டது என்றால் ஒருவேளை அந்தப் பொறுப்பை என் மனைவிக்குக் கொடுக்கலாமேதவிர மனைவியைக்கூட அநுகூலமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்கிறேன். இதை சகோ தரர்கள் மிதமிஞ்சிய காரியம் என்று நினைக்கிறீர்களா? "இப்படியெல்லாம் மிதமிஞ்சி சொல்லக் கூடாது. துவைத்துவைத்த துணியை மனைவி மடித்து வைத்தால் பெரிய விஷயமா?" என்று நீங்கள் சொல்வீர்களா. "இல்லை, தேவனுடைய மக்களாகிய நாம் இந்த உயர்ந்த சாட்சியை நிறுவ வேண் டும்," என்று சொல்வீர்களா? கா.்.ப்பி அவர்கள் வைப்பார்கள். நாம் குடித்துவிட்டு வைப்போம். பிறகு அவர்கள் எடுத்துக்கொண்டு போய் வைப்பார்கள். இவைகளை நாம் அனுமதிக்கலாமா? அல்லது நிறுவுகின்ற சாட்சி என்று ஒன்றும் இல்லை. ரெடியாக இருக்கிறதென்றால் நாமே போய் எடுத்துக் கொண்டு வருவோம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கூடுமானவரை எல்லாவற்றையும் நாம் செய் வோம். எல்லாவற்றுக்கும் ஒரு சாக்குப்போக்கு சீக்கிரமாய் கண்டுபிடிக்க வேண்டாம்; "நான் மிகவும் சோர்வாக இருக்கிறேன். அலுவல் அதிகமாக இருக்கிறது. வீட்டிலேதானே இருக்கிறாய்," என்று சாக் குப்போக்கு கண்டுபிடிக்க வேண்டாம். சாக்குப்போக்கு கண்டுபிடித்தால் அதற்கு எல்லையே இல்லை. மிகச் சிறிய பொறுப்புகளில் கருத்தாயிருங்கள் என்பது இரண்டாவது குறிப்பு.

### 3. திராணிக்குமிஞ்சின பொறுப்பு

மூன்றாவது, திராணிக்கு மிஞ்சின பொறுப்பு. தேவன் எப்போதுமே "இது என்னால் முடியும்" என்கிற பொறுப்பைத்தான் தருவாரா? "என்னால் முடியாது" என்பதுபோன்ற பொறுப்புகளையும் தருவாரா? "என் அறிவிற்கு, என் பணத்திற்கு, என் உழைப்பிற்கு, என் நேரத்திற்கு இது மிஞ்சினது என்பது போன்ற பொறுப்புகளையும் தருவாரா? அல்லது இல்லை, இல்லை, என் எல்லைகள், என் மட்டுப் பாடுகள் எல்லாம் தெரியும். அதைப் பொறுத்துதான் அவர் பொறுப்புகளைத் தருவாரா?" இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். நம் மட்டுப்பாடுகளுக்கும், எல்லைகளுக்கும் உட்பட்ட பொறுப்பு களைத் தருவார் என்பதை நாம் பதிலாக சொல்லக் கூடாது. அதற்கு மிஞ்சின பொறுப்புகளையும் தருவாரா? என் திறன் இவ்வளவு; அதற்கு உட்பட்டுத்தான் தேவன் பொறுப்புகளைக் கொடுப்பார் என்றால் ஒருநாளும் நாம் வளர்ச்சியோ, முதிர்ச்சியோ, பக்குவமோ அடையவே மாட்டோம்.

எடுத்துக்காட்டாக, நாம் ஒருநாளும் நீச்சல் அடிக்கவும் மாட்டோம். ஒருநாளும் சைக்கிள் ஓட்டவும் மாட்டோம். இதற்கு பெரிய ஆராய்ச்சி செய்து அரபு தேசத்திலே இந்த வெளிப்பாட்டைப் பெற வேண்டிய அவசியமில்லை. தேவன் நம் எல்லைகள், நம் மட்டுப்பாடுகள், நம் திறன், நம் திராண எல்லாவற்றுக்கும் மிஞ்சி நமக்குப் பொறுப்புகளைத் தருகிறார். ஏனென்றால், நம் திறனை வளர்ப் பதற்கு அல்லது நமக்குள்ளாய் இருக்கின்ற கிறிஸ்துவினுடைய அளவைப் பெருக்குவதற்கு இதைத் தவிர வேறு வழி இல்லை.

2 கொரிந்தியர் 7,8,9ஆம் அதிகாரங்களை நீங்கள் நன்றாக வாசித்து பாருங்கள். குறிப்பாக 2 கொரிந்தியர் 8, 9யை நீங்கள் பலமுறை வாசியுங்கள். அதை வாசிக்கும்போது அங்கு தேவனுடைய எண்ணம் என்பதைத் தொடுவதற்கு நீங்கள் பிரயாசப்படுங்கள். தேவனுடைய எண்ணம் என்னவென்று கேட்டால் 2 கொரிந்தியர் 8ஆம் அதிகாரம் (3 ஆம் வசனம்) "அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்க தாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென் பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்". "எனக்கு நேரமில்லை. என்னிடத்தில் அவ்வளவு பணம் இல்லை. எனக்கு அவ்வளவு உழைக்க முடியாது. ஆனால் தேவன் என்மேல் அப்படிப்பட்ட பொறுப்புகளைச் சுமத்தலாமா?" என்று சிலர் கேட்கலாம். உண்மையிலேயே ஒரு மனிதன் ஆவிக் குரியவனா என்று அவனைப் புடமிட்டு பார்ப்பதே அதுதான். அவனுடைய திராணிக்கு மிஞ்சின பொறுப்பை தேவன் அவன்மேல் சுமத்துவார். தேவன் பரலோகத்திலே சுமத்துவது இல்லை.

### பிதாவின் பாத்திரம்

“என் பிதா தந்த பாத்திரத்தில் நான் பருகாமலிருப்பேனோ!” என்றால் பிதா நேராக கோப்பையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் கொடுக்கமாட்டார். பிதா கொடுக்கிற பாத்திரம் எந்த வடிவத் திலே எப்படிதான் இருக்கும்? மனிதர்களுடைய பாத்திரம் மண்ணால், கல்லால், உலோகத்தால் செய் யப்பட்டிருக்கும். பிதாவினுடைய பாத்திரம் நம்மைச் சுற்றியிருக்கிற மனிதர்களால் தொகுக்கப்பட் டிருக்கும். கணவன், மனைவி, பிள்ளைகள், அண்ணன், தம்பி, மாமா, மச்சான், மாணவர்கள், உடன் வேலையாட்கள் இவர்களால் செய்யப்பட்டதுதான் பிதாவினுடைய பாத்திரம். இது உண்மையான பாத்திரம், ஜீவனுள்ள பாத்திரம். நீங்கள் சிந்தித்துப் பாருங்கள், ஜெபியுங்கள். “ஆண்டவரே, என் திராணிக்கு மிஞ்சின பொறுப்புகளைத் தரும்போது தட்டிக்கழித்துவிடாமல் இருக்கின்ற இருதயத்தை எனக்குத் தாரும்”.

### உயிர்த்தெழுந்த தளம்

உண்மையிலேயே இயற்கையான மனிதனின்படி அந்த பொறுப்புகளை நம்மால் சுமக்க முடியாது. ஆனால் தேவன் நம்மை அழைத்த அழைப்பு இயற்கையான மனிதர்களாய் நாம் வாழவேண்டும் என்பதில்லை. நான் சொல்வது சரிதானா? ஓ! நாம் இயற்கையான மனிதர்களாக வாழவேண்டாம் என்றால் நாம் எப்படிப்பட்ட மனிதர்களாய் வாழ வேண்டும். இயற்கையான மனிதர்களுக்கு எதிர்ப் பதம் என்ன? ஆவிக்குரிய மனிதர்கள். ஆவிக்குரிய மனிதர்கள் என்றால் இவர்கள் அசுரர்களா? ”ஓ! நான் ஏழு மணிநேரம் தூங்க வேண்டும். ஆனால் எனக்கு வந்த புதிய பொறுப்பு தூக்கத்தைக் கெடுத்து அதை ஆறு மணிநேரமாக்கிவிடுகிறது” அல்லது “என் வருவாய் இவ்வளவு இப்பொழுது வருகிற பொறுப்பு என் வருவாய்க்குமேல் போகிறதுபோல் தோன்றுகிறது. நான் போய் வலிய எடுக்கவில்லை. ஆனால் இந்த பொறுப்பு வருகிறது,” என்ற அங்கலாய்ப்பு.

அப்போஸ்தலனாகிய பவுல், “எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று,” *(2 கொரி. 1:8)* என்று அவர் தன்னுடைய அனுபவத்தைச் சொல்கிறார். “திராணிக்கு அதிகமாய் நாங்கள் வருத்தப்பட்டோம். எந்த அளவுக்கு வருத்தப்பட்டோமென்றால் பிழைப்போம் என் கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக,” என்று சொல்கிறார். “எப்படி இந்தச் சூழ்நிலைவழியாய் நான் போவேன்? இந்தப் பொறுப்பை என்னால் எப்படி சுமக்க முடியும்? என்னால் அது முடியவே முடியாது,” என்பதுபோன்ற சூழ்நிலைக்குள் கர்த்தர் தம் மக்களைக் கொண்டுவருவார்.

ஏனென்றால், அவருடைய நோக்கமெல்லாம் நம்மை இந்த இயற்கையான தளத்திலிருந்து உயிர்த் தெழுந்த தளத்திற்குக் கொண்டுவருவது. “நான் இயற்கையான தளத்தில் வாழாமல் உயிர்த்தெழுந்த தளத்தில் வாழ வாஞ்சிக்கிறேன்,” என்று எத்தனைபேர் சொல்கிறீர்கள். உயிர்த்தெழுந்த தளம் என்றால் என்னவென்று ஓர் எடுத்துக்காட்டு சொல்கிறேன். ஒரு நாள் காலையிலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தபிறகு அவருடைய சீடர்கள் மீன்பிடிக்கப் போனார்கள். அவர் களுக்கு அன்று காலையிலே ஒன்றும் கிடைக்கவில்லை. அவர்கள் கரைக்கு வந்தபோது இயேசு கிறிஸ்து அங்கே நெருப்பை மூட்டி மீன்களைச் சுட்டுக்கொண்டிருந்தார். அவர்கள் கரைக்கு வந்த வுடனே, “பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா?” என்று கேட்டார். “நீங்க ளெல்லாம் பெரிய மீன்பிடிக்கிறவர்கள். உங்களால் முடியாததா?” என்று கேட்டதற்கு “எங்களிடத்தில் ஒன்றும் இல்லை” என்று அவர்கள் சொன்னார்கள். “ஆ! வாருங்கள்! வந்து, புசியுங்கள்; நான் உங்க ளுக்காக வைத்திருக்கிறேன்,” என்றார். இந்த மீனை இயேசுகிறிஸ்து எங்கு போய் பிடித்தார்? நான் சொல்கிறேன்: மீன் உண்டாகக்கடவது என்று சொல்லியிருப்பார். மீன் உண்டாயிற்று. இயேசுகிறிஸ்து போய் வலை போட்டு மீனைப் பிடித்துக்கொண்டு வந்தாரா? இது எங்கிருந்து வந்ததென்றால் உயிர்த்தெழுந்த தளத்திலிருந்து வந்த மீன். ஆனால், இந்த மீனை சாப்பிடமுடியுமா? சாப்பிடமுடியும். இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீடர்களும் சாப்பிட்டார்கள். நான் கதை சொல்வதாக நினைக்கா தீர்கள். உயிர்த்தெழுந்த தளத்திலிருந்து வருகிற வளங்களை இந்த இயற்கையான தளத்திலே நாம் அனுபவிக்க முடியும். “மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல; தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்,” என்ற *(உபாகமம் 8:3)* வசனத்தைப் பலதடவை நாம் சொல்லியாயிற்று.

### பலிபீடம்...சிலுவை

உயிர்த்தெழுந்த தளத்திலிருந்து மீனை இயேசுகிறிஸ்து இயற்கையான தளத்திற்குக் கொண்டுவந்தார். இயற்கையான தளத்திலிருக்கிற மீனை உயிர்த்தெழுந்த தளத்திற்குக் கொண்டுபோக முடியுமா? முடி யும். எப்படி முடியும்? இதற்கு யாராவது கருவி வைத்திருக்கிறாரா? உபாயம் வைத்திருக்கிறாரா?

கருவி, அதாவது இந்தப் பெட்டிக்குள் போட்டுவிட்டால் போதும்; அது இயற்கையான தளத்திலிருந்து மாறிவிடும் என்று மாயாஜால பெட்டி வைத்திருக்கிறாரா? வைத்திருக்கிறார். **பலிபீடம்...சிலுவை.** சிலுவை ஓர் அற்புத கருவி. நாம் இயற்கையான தளத்தின் வளங்களை அங்கு வைத்தால் போதும். சிலுவை சிலபேருக்கு 6 மணி நேரம் வேலை செய்யும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 6 மணி நேரம் சிலுவையில் தொங்கினார். அல்லது 3 நாட்கள் வேலை செய்யும் அல்லது 10 நாட்கள் வேலை செய்யும். ஒருவேளை சிலருக்கு சில வருடங்கள் வேலை செய்யலாம். ஆனால், சிலுவை தன் பணியைச் செய்து முடித்தபிறகு பார்க்கும். பார்த்தால் இந்த இயற்கையான தளம் உயிர்த் தெழுந்த தளத்திற்குப் போயிருக்கும். இது கேட்க மிகவும் அருமையாக இருக்கிறது.

அருமையான சகோதரர்களே! அது அவ்வளவு இனிமையாக இருக்காது. மிகவும் வேதனையும், வருத்தமும், நொம்பலமும், கதறுதலுமாக இருக்கும். நான் சொல்வதற்கும், கேட்பதற்கும் மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. ஆனால், அனுபவ வாழ்க்கையில் அது சுவாரசியமாக இருக்காது. “போதும் கர்த்தாவே, போதும்; என் பிதாக்களைப் பார்க்கிலும் நான் நல்லவன் இல்லை. இது என்னால் முடியாது,” என்று சொல்கிற நிலைமையில்தான் அது இருக்கும். ஆகவே, நம் திராணிக்கு மிஞ்சின பொறுப்பை தேவன் தரும்போது நாம் நம் வாளை உருவிவிடுவோம். ஆனால் ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்து, “சரி, இதற்குப் பின்னால் ஒரு மகிமை காத்திருக்கிறது,” என்று சொல்வார். “அவர் தனக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானதத்தை எண்ணாமல் சிலுவை யைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்” (எபி. 12:2). அவர் சிலுவையைக்குறித்து வெட்கப்படவோ, துக்கப்படவோ, வேதனைப்படவோ இல்லை. அதற்குப்பின் ஒரு மகிமை இருக்கிறது என்பதை அவர் கண்டார்.

**பரம தளம்**

அருமையான பரிசுத்தவான்களே 2 கொரிந்தியர் 8, 9யினுடைய பாரம் என்ன? பரிசுத்தவான்கள் பஞ்சத்தில் தவிக்கிறார்கள். எனக்கு என்ன பொறுப்பு இருக்கிறது. வெளியிலிருந்து யாராவது இந்தப் பொறுப்பை சொல்ல வேண்டுமா? எல்லாப் பொறுப்புகளையும் வெளியிலிருந்து சொல்வதுபோன்ற ஒரு தாழ்வான நிலைமை வேறு எதுவும் இல்லை. “சுபாவவே உங்களுக்குப் போதிக்கவில்லையா?” என்று இயற்கையான சுபாவத்தில் அவ்வளவு இருப்பதாக அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். இயற்கையான சுபாவத்தில் அவ்வளவு இருக்கிறதென்றால் பரிசுத்த ஆவியினால் பிறப்பிக்கப்பட்ட இந்த சுபாவத்திலே எவ்வளவு போதனை இருக்கும்! இது என் பொறுப்பு என்று யாராவது சொல் லித்தான் எனக்குத் தெரிய வேண்டுமா? என் மனைவியைப்பற்றியோ அல்லது என் கணவனைப் பற்றியோ என் பொறுப்பு என்னவென்று வேறு யாராவது சொல்லித் தெரிய வேண்டுமா? சுபாவம் அதை போதிக்காதா? பிள்ளைகளைப்பற்றி அல்லது பெற்றோர்களைப்பற்றி அல்லது எல்லாவற்றிற் கும் மேலாக தேவனுடைய மக்களைக்குறித்து என் பொறுப்பு என்ன? இதற்கு அர்த்தம் எல்லா ருடைய காரியங்களிலும் தலையிட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. ஆனால் பொறுப் புள்ளவர்களாக இருக்க வேண்டும். மூக்கை நுழைப்பதற்கும், அதாவது தலையிடுவதற்கும், பொறுப் புள்ளவராயிருப்பதற்கும் திட்டவட்டமான வேறுபாடு உண்டு.

ஆனால் தேவனுடைய மக்கள் எப்போதுமே அவர்கள் திராணிக்கு மிஞ்சி அதைச் செய்தார்கள். ஏனென்றால், திராணிக்கு மிஞ்சின பொறுப்பை தேவன் அவர்கள்மேல் சுமத்தும்போது எப்படி எடுத் துக்கொண்டார்களென்றால், “நாங்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்” (2 கொரி. 8:2). மனிதர்கள் எப்போதுமே, “எனக்கு இருக்கிற நேரம் எனக்கே போதாது. என் பணம் எனக்கே போதாது. என் உழைப்பு எனக்கே போதாது,” என்று சொல்வார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து முன்மாதிரியாக வைத்து அவர் சொல்கிறார். “அவனவன் தனக்கானவைகளல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக,” (பிலி. 2:4) என்று சொல்கிறார். மேலும் தீத்துவைப்பற்றி, “உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக் கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை. மற்ற வர்களெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல் தங்களுக்குரியவைகளையே தேடு கிறார்கள்,” (பிலி. 2:20, 21) என்றும் பவுல் சொல்கிறார். “ஆ! இவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக் குப் பகைஞர்கள். இந்த பூமிக்குரியவைகளைக்குறித்தே அவர்கள் யோசிக்கின்றார்கள்”.

பரம வளங்கள் என்று ஒன்று உண்டு. அவைகளால் வாழ முடியும் என்பதில் அவர்களுக்கு விசு வாசம் இல்லை. விசுவாசம் என்றால் என்ன? “நான் சைக்கிளில் போனேன். விசுவாசத்தில் ஜெபம் பண்ணினேன். கர்த்தர் இப்பொழுது ஒரு காரைக் கொடுத்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு

ஸ்தோத்திரம்,” என்று சொல்வதைப்போன்ற ஒரு கேவலமான சாட்சி இல்லை. விசுவாசம் என்றால் என்ன? “ஆ! இயற்கையான மனிதனின்படி என்னால் அதைச் செய்ய முடியாது. ஆனால், தேவனுடைய கோட்பாடு இப்படித்தான் செய்யவேண்டுமென்று கோரினது. இயற்கையான கணக்கின்படி நான் அதைச் செய்திருக்க முடியும். ஆனால், தேவனுடைய வழி எப்போதுமே சிலுவையின் வழி. அது இப்படித்தான் நடந்தாக வேண்டும் என்று என்னை நிர்பந்திக்கிறது; அது என்னைக் கட்டாயப் படுத்துகிறது. நான் இயற்கையாய் வழியில் நடவாமல், எனக்கு வசதியான வழியின்படி நடக்காமல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையின் வழியில் நடந்தேன். நான் மிகுந்த வேதனைப்பட்டேன். ஆனால் அதன் முடிவு எனக்கு மகிமையாகவும், சந்தோஷமாகவும் இருந்தது. இதுவே சாட்சி.

“நான் சைக்கிள் வைத்திருந்தேன். ஜெபம் பண்ணினேன். கர்த்தர் எனக்கு மோட்டார் சைக்கிள் கொடுத்தார். கார் தந்தார்,” என்பதில் என்ன சிலுவையின் வழி இருக்கிறது? இவர்கள் ஜெபம் பண்ணிவிட்டார்களாம். அதுதான் பெரிய நன்மை. மற்றவர்கள் யாரும் ஜெபம்பண்ணுவதில்லை. அதில் எந்த சாட்சியும் இல்லை.

### 4. பிறர் தங்கள் பொறுப்புகளில் தவறும்போது சகித்தல்

நான்காவது, பிறர் தங்களுடைய பொறுப்புகளில் தவறும்போது நாம் அதைச் சகிக்க வேண்டும். “என் கணவனுடைய பொறுப்பு என்ன,” என்று ஒருவேளை என் மனைவிக்குத் தெரியலாம். ஆனால் என் பொறுப்புகளில் நான் தவறுகிறேன் என்று வைத்துக்கொள்வோம். அப்போது என்ன செய்ய வேண்டும்? தேவனுடைய வீடு, தேவனுடைய குடும்பம் என்றால் சகலத்தையும் பொறுத்துக்கொள்ளும். “நீங்கள் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து அப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்,” (கலா. 6:2) என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார். இந்த வசனத்துக்கு என்ன பொருள்? பொருள் என்னவென்றால் என் பொறுப்புகளை என்னால் செய்ய முடியும். ஆனால், என் பிள்ளைகள் தங்களுடைய பொறுப்புகளைச் சுமப்பதற்கு தவறும்போது அது எனக்கு சுமையாய் மாறிவிடும். ஆனால், நாம் இயற்கையான மனிதர்கள்; எனவே நம் பொறுப்புகளே நமக்கு சுமையாகத் தோன்றும். என் துணியை நான் துவைக்க வேண்டுமே! அதுவே எனக்கு சுமைதான். “அந்தத் துணியைக் கொஞ்சம் இஸ்திரி பண்ணிவிடுகிறாயா?” என்று மனைவியிடம் அன்பான வேண்டுகோள் விடுவது. நான் அதைச் சொல்லவில்லை. நான் நம் பொறுப்புகளைச் சொல்லவில்லை. நம் பொறுப்புகள் சுமையல்ல.

பிறர் தங்கள் பொறுப்புகளில் தவறும்போது அது நமக்குச் சுமையாக, பாரமாக, பழுவாக மாறிவிடும். அதை நீங்கள் என்ன செய்ய வேண்டும்? “நீங்கள் அதைச் சகித்துக்கொள்ளுங்கள்,” என்று தேவனுடைய வார்த்தை சொல்கிறது. அது கிறிஸ்துவின் பிரமாணம். இல்லாவிட்டால் அங்கு தேவனுடைய குடும்பம் இல்லை; தேவனுடைய வீடு இல்லை; சபை என்று ஒன்று இல்லை. நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள்,” என்று (கலா. 5:15) பவுல் சொல்கிறார். நம் குடும்பமாக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி அது தேவனுடைய குடும்பம்தான். பிறர் தங்கள் பொறுப்புகளில் தவறும்போது நாம் மனதிலே வேதனைப்பட வேண்டாம். அது நமக்கு வேதனையை உண்டுபண்ணும். ஆனால், அது நம்மைத் தனிப்பட்ட விதத்திலே உயிர்த்தெழுதலுக்குள் கொண்டுவந்துவிடும்.

அவர்கள் அறியாத ஒரு போஜனத்தினால், அவர்கள் தெரியாத வளங்களால், நாம் வாழ ஆரம்பித்துவிடலாம். நான் உங்களை ஏமாற்றுவதுபோல் தோன்றலாம். பேதுரு இயேசுகிறிஸ்துவிடம், “சிலுவையைப்பற்றிப் பேசாதேயும்; உம்மை நீரே வஞ்சித்துக் கொள்ளாதேயும்,” என்று சொன்னான். “சிலுவையின்வழியாக நீர் ராஜாவாக மாற முடியாது. இந்த வழி வேலைக்கு உதவாது,” என்பது பேதுருவின் கூற்று.

யாராவது நம்மைச் சாதகமாக எடுத்துக்கொண்டார் நாம் என்ன செய்வோம்? வாளை உருவி ஒரே வெட்டாக வெட்ட வேண்டும். இல்லையா? வாளை உருவி வெட்டுவது இயற்கையான மனிதனின் வழி. ஆனால் கர்த்தருடைய வழி என்ன தெரியுமா? வாளை உறையிலே போடுவது. இயற்கையான மனிதன் என்ன சொல்வான் தெரியுமா? “நீ வெட்டும்போது எங்கள் கை பூப்பறிக்க போய்விடுமா?” கைகள் பூப்பறிக்கப் போகக்கூடாது. கைகள் இரண்டும் சிலுவையில் ஆணிகளால் கடாவப்பட்டிருக்க வேண்டும். “எங்கள் வாயை நாங்கள் மூடிக்கிட்டு இருப்போமா?” என்பது இயற்கையான மனிதனின் வாதம்.

அருமையான பரிசுத்தவான்களே, எதையும் “இது என் பொறுப்பல்ல” என்று தயவுசெய்து துணிந்து சொல்லாதீர்கள். “தேவனே, அது உம் பொறுப்பென்றால், அது என் திராணிக்கு மிஞ்சினதாக இருந்

தாலும் சரி, நான் என் கழுத்தைக் கொடுக்கிறேன்," என்று சொல்ல வேண்டும். மிக முக்கியமாக வாலிபர்களுக்கு நான் சொல்வேன். "தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனிதனுக்கு நல்லது. அவரே அதைத் தன்மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மௌனியாயிருக்கக்கடவன். நம்பிக்கைக்கு இடமுண்டோ என்று தன் வாயைத் தூளில் நுழுந்துவானாக" (புல. 3:27, 28, 29). "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்" (புல. 3:22, 23).

ஆகவே, நம் பொறுப்புகளில் நாம் உண்மையாயிருப்போம். முதலாவது, தேவன் நம்மை எந்த நிலையில் வைத்திருந்தாலும் நம் பொறுப்புகளை வரையறுக்க வேண்டும். தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் சிறிய பெரிய பொறுப்புகளைத் தேவன் கொடுக்கின்றார். இரண்டாவது, மிகச் சிறிய பொறுப்புகளிலே நாம் கருத்தாயிருப்போம். மூன்றாவது, நம் திராணிக்கு மிஞ்சின பொறுப்புகளைத் தேவன் சுமத்தும்போது நாம் அதை மனமகிழ்ந்து ஏற்றுக்கொள்வோம். நான்காவது, பிறர் தங்கள் பொறுப்புகளிலே பிசகும்போது அல்லது தங்களுடைய பொறுப்புகளில் அவர்கள் அதைப்பற்றி கவனமே இல்லாமல் இருக்கும்போது...ஒருவேளை கணவன் பிள்ளைகளைப்பற்றி மிகவும் பொறுப்பற்ற மனிதனாக இருக்கலாம். அவரைப் பொறுத்தவரை பிள்ளைகளுக்குச் சோறு போட்டால் போதும், பிள்ளைகள் தானாகவே வளர்ந்திடும் என்று நினைக்கலாம். "கல்விக்கட்டணம் செலுத்தி, சாப்பாடு போட்டால் போதும்; கடகடவென்று வளர்ந்துவிடுவார்கள்," என்று அவர் நினைக்கலாம். ஆம்! அவர்கள் வளர்ந்து முரட்டாட்டமுள்ளவர்களாகவும், கலகக்காரர்களாகவும் இருப்பார்கள். ஒவ்வொரு நாளும் "இந்தப் பிள்ளைகளுடை எண்ணங்கள் என்ன, உணர்ச்சிகள் என்ன, ஏன் இப்படிப்பட்ட எண்ணங்கள் வருகின்றன, நம் பதில் என்ன" என்று விளக்குவதற்கு நாம் கடனாளிகளாயிருக்கிறோம். எல்லாவற்றிற்கும்மேலாக நாம் தேவனுடைய மக்களுக்காக நம் பொறுப்புகளை நிறைவேற்றிவிட்டு, காலரைத் தூக்கிவிட்டு, "ஆ! எவ்வளவு பெரிய பொறுப்புகளை நிறைவேற்றிவிட்டோம்," என்று நாம் சொல்லக்கூடாது. ஒரு வேலைக்காரனைப்பற்றி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்தபின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம்."

"ஆண்டவரே, இன்னும் கொஞ்சம் ஞானமும், கிருபையும் இருந்திருந்தால் இதைவிட அற்புதமாய் என் பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கலாம். அது உமக்கும், உம்முடைய மக்களுக்கும் எவ்வளவு கனியுள்ளதாய் இருக்கும்! என் அறிவீனத்தால், மதியீனத்தால், என் முதிர்ச்சியின்மையினால் பல பொறுப்புகளை நான் தவறவிட்டேன் அல்லது என் சுயநலத்தால், ஆண்டவரே, என் இன்பம் பாடுபடும் என்பதற்காக எவ்வளவு பொறுப்புகளை நான் தவறவிட்டுவிட்டேன்," என்பது நம் உணர்ச்சியாக இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் என் பொறுப்புகளில் ஒரு சிறிய பங்கைத்தான் நான் செய்திருக்கிறேன். "ஆ! எவ்வளவு பொறுப்புகளை நிறைவேற்றிவிட்டேன்" என்பது மட்டுமே நம் மனப்பாங்காக இருக்கக்கூடாது.